No. of Printed Pages : 7

**6351**

பதிவு எண் SEP2016

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

SSLC

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் 49 - விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6x1=6

1. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் __________ .

(அ) நால்வர் நான்மணிமாலை

(ஆ) திருவள்ளுவமாலை

(இ) இரட்டைமணிமாலை

2. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் __________ .

(அ) கவிமணி (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார்

3. கம்பரைப் புரந்தவர் __________ .

(அ) ஔவையார் (ஆ) புகழேந்தி (இ) சடையப்ப வள்ளல்

[ திருப்புக

4. ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் __________ .

(அ) திருக்குறள்

(ஆ) புறநானூறு

(இ) அகநானூறு

5. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் __________ .

(அ) பேரறிஞர் அண்ணா

(ஆ) மு. வரதராசனார்

(இ) திரு.வி.க.

6. பெண் அடிமை ஆனதற்குரிய காரணங்களுள் ஒன்று __________ இல்லாமை.

(அ) வாக்குரிமை

(ஆ) பேச்சுரிமை

(இ) சொத்துரிமை

## பகுதி - 2

II. கோடிட்ட இடத்தை நிரப்புக : 6x1=6

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு __________ அமைந்துள்ளன.

8. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் __________ .

9. நிற்க நேரமில்லை என்னும் கவிதை __________ என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ளது.

10. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு __________ இருக்கும்.

11. இலெமூரியாவை __________ நாகரிகத் தொட்டில் என்பர்.

12. நாள்தோறும் கல்வியில் __________ உருவாகிக் கொண்டிருக்கின்றன.

## பகுதி - 3

III. பொருத்துக. 4x1=4

| | | |
|---|---|---|
| 13. சந்தம் | - | புலி |
| 14. தொடை | - | நீர் |
| 15. உழுவை | - | மாலை |
| 16. புனல் | - | அழகு |

## பகுதி - 4

IV. விடைக்கேற்ற வினா அமைக்க. 4x1=4

17. அம்பேத்கர் மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தவர்.

18. உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும்.

19. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

20. வடலூரில் சத்திய தருமசாலை உள்ளது.

## பிரிவு - II

( மதிப்பெண்கள் : 20 )

## பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5x2=10

21. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

22. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

23. 'இப்போது இங்கு அவன் உதவான்' - யார் யாரிடம் கூறியது?

24. குகனின் வேண்டுகோள் யாது?

25. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை?

[ திருப்புக

26. வேந்தற்குரிய பொருள்கள் எவை ?

27. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 5x2=10

28. ஒரு மொழி நிலை பெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை ?

29. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை ?

30. தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் ?

31. 'உலகம்' என்னும் சொல்லின் பெயர்க் காரணம் தருக.

32. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை ?

33. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டினைக் கூறுக.

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

## பிரிவு - III

( மதிப்பெண்கள் : **24** )

## பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 3x4=12

35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?

37. புறநானூற்றுப் பாடல் வாயிலாக கண்ணகனார் கூறும் கருத்துகளை எழுதுக.

38. 'சீறாப்புராணம்' - குறிப்பு எழுதுக.

39. 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

## பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 3x4=12

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

44. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

45. 'ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை'

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

(ii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

(iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

(iv) இலக்கணக் குறிப்பு எழுதுக - 'ஒழுகுதல்'

(v) பொருள் தருக - 'கிளை'

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830 ஆம் ஆண்டு கண்டுபிடித்த பின்னர், எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றார். ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். எடிசன், ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவியைக் கண்டுபிடித்தார். பிரான்ஸிஸ் ஜென்கின்சு என்ற அமெரிக்கர் 1894 இல் ரிச்மெண்ட் என்னுமிடத்தில் இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார். புதிய பட வீழ்த்திகள் உருவாக இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

**வினாக்கள்.**

(i) ஒளிப்படம் எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

(ii) ஈஸ்ட்மன் எதனைக் கண்டுபிடித்தவர்?

(iii) புதிய பட வீழ்த்திகள் உருவாக யாருடைய கருத்துகள் அடிப்படையாக அமைந்தன?

(iv) இயக்கப் படத்தை வடிவமைத்த ஆண்டு எது?

(v) இப்பத்திக்கேற்ற தலைப்புத் தருக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : **26**)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். 2x8=16

47. (அ) ''தேரா மன்னா'' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?

**அல்லது**

(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.

## பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10

(அ) 'அருவினை' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'விடல்' - என முடியும் குறள்.

(இ) 'மெய்தான்' - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

(ஈ) 'இன்று தொட்டிவண்' - எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

- o 0 o -